**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**ஆணை நாள் 03.04.2025**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 12004/E/2023**

திரு ரா.செந்தில் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், தென் சென்னை கோட்டம், சென்னை -- பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

1) இவ்வாணையத்தின் 22.10.2024 நாளிட்ட உத்தரவை தொடர்ந்து, தென் சென்னை கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் திரு டி.பால் ஆனந்தராஜ் 20.03.2025 அன்று இவ்வாணையத்தில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

2) அவ்வறிக்கையில், மனுதாரரின் பரப்பு திருத்தம் கோரிக்கை தொடர்பாக ஆலந்தூர் வட்டாட்சியரிடம் அறிக்கை கோரப்பட்டது என்றும், அதனை தொடர்ந்து பெறப்பட்ட அறிக்கையில் மனுதாரர் குறிப்பிடும் புலமான பிளக் எண்.10, சர்வே எண்.127-ல், 121 ச.மீட்டரில், 50 சதுரமீட்டர் தவிர மீதமுற்ற 71 சதுர மீட்டர் நிலம், நிரந்தர நிலப்பதிவேட்டில் 'மிலிட்டரி நிலம்' என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் இந்த தகவல் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டு பின்னர் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆலந்தூர் வட்டாட்சியரிடம் மீள் அறிக்கை

கோரப்பட்டுள்ளது என்றும், அந்த அறிக்கை வரப்பெற்ற பின் கோப்பின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த இவ்வாணையம், ஆலந்தூர் வட்டாட்சியரிடமிருந்து மீள் அறிக்கை பெற்றபின் அதிலுள்ள விவரங்களை மனுதாரருக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பிவிட்டு, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணையத்தின் முன்பாக **28.05.2025** அன்று பொதுத் தகவல் அலுவலர் நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது

**(ஒம்/- (பி.தாமரைக்கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்கள். SA 12004/E/2023**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
தென் சென்னை கோட்டம், கிண்டி
சென்னை

திரு ரா.செந்தில், த/பெ ராஜா
எண்.84, 114-சி, செஞ்சி சாலை,
திண்டிவனம் - 604 001
விழுப்புரம் மாவட்டம்

Copy to: File
CR/PA